## மணப்பாறை நகராட்சி

**2017 – ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24.04.2017 ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 24.04.2017 | **பொருள் எண் –1**<br>மத்திய மாநில அரசுத்துறைகளிடம் அனுமதிபெற்று பல்வேறு பணிகள் இந்நகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே நகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் மற்றும் சாக்கடை பணிகளை விரைந்து நடைமுறைப்படுத்தி ஏற்படும் செலவுகளை குறைக்க வேண்டிய சூழல் உள்ளது. பேரிடர் ஏற்படும் காலங்களில் பிற துறைகளிடம் அனுமதி பெற்று அத்தியாவசிய பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய செலவினங்கள் கால தாமதத்தினை தவிர்க்கவும் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளவும், நகராட்சியே பராமரிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பும்பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.கஎண்.29727/2016/இ3 நாள் 21.04.2017 தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கு<br>3. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தின்படி பிற துறைகளின் சாலைகளை நகராட்சியே பராமரிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பலாம்.<br>(ந.க.எண்0719/2017/எப்1) | **தீர்மானம் எண் .122**<br>**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.** |
| 24.04.2017 | **பொருள் எண் –2**<br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016 ஐ இந்நகராட்சியில் செயல்படுத்த துணை விதிகள் மூலம் குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து நிர்வாக கட்டணம் வசூல் செய்யவும் , விதியை மீறுபவர்களுக்கு அபராத கட்டணம் வசூல் செய்யவும் துணை விதிகள் அறிவிக்கையை கடந்த 09.03.2017 அன்று தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, விளம்பரம் வெளியான நாளிலிருந்து 30 | **தீர்மானம் எண் .123**<br>**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | தினஙகளுக்குள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க அறிவிப்பு செய்யப்பட்டது. ஆட்சேபனைகள் எதுவும் வரப்பெறவில்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016ஐ இந்நகராட்சியில் செயல்படுத்தவும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண் 182/2017/எச்1) | |
| 24.04.2017 | பொருள் எண் –3<br>மணப்பாறை நகராட்சி<br>பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் – 2016<br>சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்– 29/1986) பிரிவு 3, 6 மற்றும் 25 களில் வழஙகப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் – 2016ஐ இயற்றியுள்ளது. இந்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் – 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும், தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை, விற்பனை செய்தல், பயன்படுத்துதல், விநியோகம் செய்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை சேமித்தல், தரம் பிரித்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிகளை முறைப்படுத்த அந்தந்த நகராட்சிகளுக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி<br>மணப்பாறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள்,<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டது.<br>1. மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட 50 மைக்ரானுக்கு குறைவான கேரி பைகள், ஒரு முறை பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் விரிப்புகள் போன்றவற்றை சேமித்து வைக்கவோ, விற்பனை செய்யவோ, விநியோகம் செய்யவோ, பயன்படுத்தவோ கூடாது என தடை விதிக்கப்படுகிறது. இத்தடையை மீறுவோர் மீது கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்படும்.<br>2. பிளாஸ்டிக் பாட்டில் அல்லது பொட்டலத்தில் பொருட்கள் விநியோகம் செய்யும் நிறுவனஙகளே அவ்வாறு பயன்படுத்தப்பட்ட பாட்டில்களையும், பொட்டல உறைகளையும் திரும்ப பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.<br>3. பிளாஸ்டிக் கழிவுகளை எந்த ஒரு இடத்திலும் எரிக்கக் கூடாது. | தீர்மானம் எண் .124<br>அனுமதிக்கப்பட்டது. |

4. 50 மைக்ரானுக்கு அதிகமான தடை செய்யப்படாத கேரிபைகள் பயன்படுத்தும் நிறுவனங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.4000/– வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.48000/– செலுத்தி பதிவு செய்த பின்னரே சிறிய கேரிபை ஒன்றுக்கு ரூ.2/–வீதமும், பெரியகேரி பை ஒன்றுக்கு ரூ.5/– வீதமும் விற்பனை செய்ய வேண்டும்.

5. **தவறும் நபர்களுக்கு கீழ்க்கண்டவாறு அபராதத் தொகை வசூலிக்கப்படும்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மொத்த விற்பனையாளருக்கு | – | ரூ.5000/– ( ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| 2. | சில்லரை விற்பனையாளருக்கு | – | ரூ.1000/– ( ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| 3. | விநியோகம் செய்பவர்களுக்கு | – | ரூ.1000/– ( ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| 4. | உபயோகிப்பாளர்களுக்கு | – | ரூ.500/– ( ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| 5. | பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத நிறுவனங்களுக்கு | – | ரூ.1000/– ( ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| 6. | பிளாஸ்டிக் கழிவுகளை எந்தவொரு இடத்திலும் எரிப்பவருக்கு | – | ரூ.200/– ( ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| 7. | பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத வீடுகள், தனிநபர் | – | ரூ.100/– ( ஒவ்வொரு நிகழ்விற்கும்) |

6. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு அரசு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ், சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1986 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன்படி மணப்பாறை நகராட்சியின் சுற்றுச்சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

7. துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக ரூ.1000/– அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

8. தொடர் குற்றங்களுக்கு கூடுதலாக தினசரி ரூ.100/– வீதம் அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

9. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழஙகப்படுகிறது.

இச்செயல்பாடுகள் அனைத்தும் அமுல்படுத்தும் வகையில் இது தொடர்பாக பொதுமக்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெற நாளிதழில் பிரசுரம் செய்து எழுத்து பூர்வமாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நாளிதழில் விளம்பரம் செய்து பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் ஆலோசனைகள்

மற்றும் ஆட்சேபணைகளின் மீது இறுதி முடிவு எடுக்க ஆணையாளருக்கு அதிகாரம் வழஙகலாம்.

3. தொடர் நடவடிக்கையாக மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.182/2017/எச்1

24.04.2017

<u>பொருள் எண் –4</u>

இந்நகராட்சிக்கு அரசு மான்யம் பெற்று ரூ.500.00 லட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதியபேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பேருந்து நிலையத்தில் புதிய கடைகள் 1 முதல் 27 முடிய உள்ளது. உணவு விடுதி, இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம், கட்டணக் கழிப்பறைகள், பொருள்பாதுகாப்பு வைப்பறை தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் மற்றும் புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் ஆகியவைகள் வசூலிக்க கீழ்க்குறிப்பிட்டவாறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | முன்வைப்பு த் தொகை ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் 01.1.2017க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும். ரூபாய் இலட்சத்தில் | சொத்து மதிப்பு சான்றிதழுக்கு பதில் செலுத்த வேண்டிய கூடுதல் பொருப்பு தொகை ஒன்றிற்கு ரூபாய் இலட்சத்தில் | உரிம அனுமதி காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடை எண்.1 முதல் 27 முடிய உள்ள கடைகள் ஏல உரிமை | ரூ.5.00 லட்சம் (கடை ஒன்றுக்கு) | ரூ.10.00 லட்சம் (கடை ஒன்றுக்கு) | ரூ.2.50 லட்சம் (கடை ஒன்றுக்கு) | 9 ஆண்டுகள் (தொகுப்பு கால அளவு) |
| 2. | பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடம் | ரூ.5.00 லட்சம் | ரூ.10.00 லட்சம் | ரூ.2.50 லட்சம் | 3 ஆண்டுகள் |
| 3. | பேருந்து நிலையத்தில் ஆண்கள் கட்டணக் கழிப்பறை வசூல் செய்யும் உரிமை | ரூ.3.00 லட்சம் | ரூ.6.00 லட்சம் | ரூ.1.50 லட்சம் | 3 ஆண்டுகள் |
| 4. | பேருந்து நிலையத்தில் | ரூ.3.00 | ரூ.6.00 லட்சம் | ரூ.1.50 லட்சம் | 3 ஆண்டுகள் |

**தீர்மானம் எண் .125**
**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெண்கள் கட்டணக் கழிப்பறை வசூல் செய்யும் உரிமை | லட்சம் | | | |
| 5. | பேருந்து நிலையத்தில் உள்ள உணவு விடுதி நடத்திக் கொள்ளும் உரிமம் | ரூ.10.00 லட்சம் | ரூ.20.00 லட்சம் | ரூ.5.00 லட்சம் | 3 ஆண்டுகள் |
| 6. | பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை | ரூ.9.00 லட்சம் | ரூ.18.00 லட்சம் | ரூ.4.50 லட்சம் | 3 ஆண்டுகள் |
| 7. | பொருள் பாதுகாப்பு வைப்பறை அனுபவிக்கும் உரிமை | ரூ.1.00 லட்சம் | ரூ.2.00 லட்சம் | ரூ.0.50 லட்சம் | 3 ஆண்டுகள் |
| 8. | பேருந்து நிலையத்திற்குள் தொலைக்காட்சி வைத்து விளம்பரம் செய்யும் உரிமை | ரூ.2.00 லட்சம் | ரூ.4.00 லட்சம் | ரூ.1.00 லட்சம் | 3 ஆண்டுகள் |

மேற்கண்டவாறு வைப்புத்தொகை நிர்ணயம் செய்து பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. அரசாணை மற்றும் ஏலக்கட்டுப்பாடு பொது விதிகளுக்கு கட்டுப்பட்டு ஏலம் வி மன்றம் அனுமதிக்கலாம்.
3. (ந.க.எண் / 744 / 2016/ அ2)

தனி அலுவலர்
மணப்பாறை நகராட்சி